**S.C.No.371/2019** **PW6** திரு. ராஜ்

நாள் **-24.04.2024.**

**(**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்**.)**

எதிரி ஆஜர்**.**

குறுக்குவிசாரணை **(** எதிரி தரப்பில்**)**

அ.சா.1 அருள்செல்வி இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகனின் இரண்டாவது மனைவியாவார். இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகன் சிவில் என்ஜினியரிங் முடித்துவிட்டு கான்ட்ராக்ட் தொழில் செய்துவந்தார். அவர் கொடுக்கல், வாங்கல் தொழில் ஏதும் செய்துவந்தாரா என்றால் எனக்கு அதைப்பற்றி தெரியாது. எனது மகளான அ.சா. 1 அருள்செல்வி எங்கு சென்றுவிட்டு வரும்போது சம்பவம் நடந்தது என்ற விபரத்தினை என்னிடம் சொன்னாரா என்றால் சொன்னார். ஆனால் அவர் யாரை பார்க்கப்போனார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. எனக்கு என் மகள் உடனடியாக தகவல் தெரிவிக்கவில்லை, அவர் அவ்வாறு தகவலை எனக்கு தெரிவிக்கும்போது சுமார் 06.00 முதல் 06.30 மணி இருக்கும். நான் மருத்துவமனையிலிருந்து கவால் நிலையத்திற்கு செல்லும்போது மாலை சுமார் 07.00 மணி இருக்கும். அன்றைய தினம் மருத்துவமனையில் வைத்து என்னை போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். நாங்கள் மாலை 07.30 மணி முதல் 08.00 மணிக்குள் காவல்நிலையம் சென்றோம், உடனடியாக புகார் ...

கொடுக்கவில்லை, என் மகள் அழுதுகொண்டிருந்தார். நான் என் மகளை தேற்றினேன். காவல்நிலைய வளாகத்தில் எந்த போலீசாரும் என்மகளையோ, என்னையோ உடனடியாக விசாரிக்கவில்லை, ஆனால் புகார் கொடுக்கச் சொன்னார்கள். அந்த புகாரை எழுதிய என் உறவினர் யார் என்ற விபரத்தினை நான் போலீஸ் விசாரணையிலும், என் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி புகாரினை என் உறவினர் எழுதவில்லை என்றும், போலீசார் தான் எழுதினார்கள் என்றும், அதில் நானும் என் மகளும் கையெழுத்து செய்தோம் என்றால் சரியல்ல. நான் ஆசிரியராக பணியாற்றி தற்போது ஓய்வு பெற்றுவிட்டேன், எனக்கு எழுத படிக்கத் தெரியும். நான் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றதால் என்னால் புகாரை எழுதியிருக்க முடியும் என்றும் அதை விடுத்து போலீசார் எழுதிய புகாரை மறைத்து என் உறவினர் மேற்படி புகாரை எழுதியதாக நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பந்தமாக என்னை போலீசார் சம்பவம் நடந்த மறுநாள் மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். அவ்வாறு மருத்துவமனையில் வைத்து விசாரிக்கும்போது தட்டச்சு செய்தார்களா அல்லது எழுதினார்களா என்றால் எனக்கு அந்த சமயத்தில் தெரியவில்லை. என் மகள் செல்போனில் என்னிடம் தகவல் சொன்னதைக் குறித்து போலீசார் என் மகளின் போன் நம்பர் குறித்து எதுவும் விசாரித்தார்களா என்றால் இல்லை. இவ்வழக்கில் இறந்துபோன அறிவழகன் என் மருமகன் என்ற காரணத்தினாலும், புகார் ....

கொடுத்தவர் என் மகள் என்பதாலும் போலீசார் சொல்லிக் கொடுத்ததன்பேரில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த சம்பவம் என் மகளும், மற்ற நபர்களும் பேசியதனால் எனக்குத் தெரியும், நான் அங்கில்லாததால் எனக்கு சம்பவம் பற்றி நேரடியாகத் தெரியாது.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - ராஜ்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு
சாட்சி கையெழுத்திட்டார்.
Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.

**S.C.No. 371/2019 PW 8** திரு**.** வாசுமுத்து

நாள் **-24.04.2024.**

**(**சாட்சி மனுவின்பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்படுகிறார்**.)**

எதிரி ஆஜர்**.**

குறுக்குவிசாரணை **(** எதிரி தரப்பில்**)**

நான் வி ஏ ஓ பணியில் 13 ஆண்டுகளாக இருந்து வருகிறேன். எதிரியை போலீசார் பிடித்து வைத்திருந்ததாக சொல்லும் இடம் எனது நிர்வாக எல்லைக்குள் இல்லையென்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் எனது பதவியின் அடிப்படையான சாட்சியாக சென்றேன். நான் அவ்வாறு பதவியின் அடிப்படையில் சாட்சியாக இருக்கும்போது எனது பதவி முத்திரையை பயன்படுத்த வேண்டுமென்றால் சரிதான். என் முன்னிலையில் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் அரிவாளில் இரத்தக்கறை ஏதும் இருந்ததா என்ற விபரத்தினை நான் போலீஸ் விசாரணையிலும், எனது முதல் விசாரணையில் நான் சொல்லவில்லையென்றால் சரிதான். எதிரி அணிந்திருந்ததாக சொல்லப்படும் உடையில் இரத்தக்கறை இருந்ததாக போலீஸ் விசாரணையிலும், என்னுடைய முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சொல்லியிருக்கிறேன். என் முன்பாக கைப்பற்றியதாக சொல்லப்படும் கருப்பு கலர் பேக்கில் ஏதாவது குறியீடு ....

இருந்ததா என்ற விபரத்தினை நான் போலீஸ் விசாரணையிலோ அல்லது என் முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அத்தாட்சியில் நான் கையெழுத்து மட்டும் செய்துள்ளேன். முத்திரை வைத்தேனா இல்லையா என்பது எனக்கு சரியாக ஞாபகமில்லை. பொதுவாக, பதவியின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கும்போது ஆவணங்களில் எனது நிர்வாக முத்திரையை வைக்கவேண்டும் என்றால் சரிதான். எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் ஒப்புதல் வாக்குமூலம் எத்தனை மணிக்கு ஆரம்பித்து எத்தனை மணிக்கு முடிந்ததென்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சாட்சியம் அளிக்கப் போகும் விபரத்தினை என் உயர் அதிகாரிகளுக்கு செல்போன் மூலமாக தகவல் தெரிவித்துள்ளேன். வி ஏ ஓ -க்கான குறிப்பேட்டின்படி நான் சாட்சியாக இருக்கும்பட்சத்தில், முன் அனுமதி கடிதம், எதிரியின் ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவற்றை மூன்று நகல்களாக தயாரித்து அவற்றின் நகலை உயர் அதிகாரிகளுக்கு கொடுத்து ஒப்பம் பெறவேண்டுமென்று சொன்னால் அது நடைமுறையில் இல்லை. மேற்சொன்ன விபரங்களை நான் சட்டப்படி பின்பற்றவேண்டும் என்றும், நான் இவ்வழக்கில் அதை பின்பற்றாததால் அது நடைமுறையில் இல்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கைப் பொறுத்தவரை நானும், என் உதவியாளரும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதிரியை கைது செய்ததாக சொன்ன இடத்திற்கு செல்லவில்லை ........

என்றும், காவல் நிலையத்தில் வைத்திருந்த எதிரியை பார்த்துவிட்டு ஆய்வாளர் தயாரித்த ஆவணங்களில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை - இல்லை.

ஒப்பம் - வாசுமுத்து.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.